ஸ்ரீ:

# ஸ்ரீரங்கநாதாஷ்டகம்




**www.srirangapankajam.com**

आनन्दरूपे निजबोधरूपे ब्रह्मस्वरूपे श्रुतिमूर्त्तिरूपे ।

शशाङ्करूपे रमणियरूपे श्रीरङ्गरूपे रमतां मनो मे ।। १ ।।

*ஆனந்த$_3$ரூபே நிஜபோ$_3$த$_4$ரூபே*

*ப்$_3$ரஹ்மஸ்வரூபே ஶ்ருதிமூர்த்திரூபே .*

*ஶஶாங்கரூபே ரமணியரூபே*

*ஶ்ரீரங்க$_3$ரூபே ரமதாம் மனோ மே .. ௧ ..*

ஆனந்தமும், அறிவுமானதும், ப்ரும்ம ஸ்வரூபமும், வேதமே உடல் கொண்டது போன்றதும், சந்திரன் போன்ற ஒளி ஸ்வரூபமும், அழகான உருவம் கொண்டதுமான, திருவரங்கநானின் திருமேனியில் என் மனது லயிக்கட்டும்.

लक्ष्मिनिवासे जगतां निवासे हृत्पद्मवासे रविबिम्बवासे ।

क्रुपानिवासे गुनभ्रुन्दवासे श्रीरङ्गवासे रमतां मनो मे ।। २ ।।

*லக்ஷ்மினிவாஸே ஜக$_3$தாம் நிவாஸே*

*ஹ்ருத்பத்$_3$மவாஸே ரவிபி$_3$ம்ப$_3$வாஸே .*

*க்ருபானிவாஸே கு$_3$ணப்$_4$ருந்த$_3$வாஸே*

*ஶ்ரீரங்க$_3$வாஸே ரமதாம் மனோ மே .. ௨ ..*

லக்ஷ்மீக்கு இருப்பிடமாயும், உலகங்களுக்கு வாசஸ்தானமாயும், நல்லோர்களின் உள்ளத் தாமரையில் வசிப்பவனும், சூரிய பிம்பத்தில் வசிப்பவனும், கருணைக்கு உறைவிடமாயும், குணங்களுக்கு உறைவிடமாயும், திருவரங்கத்தில் கோயில் கொண்டவனுமான திருவரங்கநாதனிடத்தில் என் மனம் லயிக்கட்டும்.

ब्रह्मादिवन्ध्ये जगदेकवन्ध्ये मुकुन्दवन्ध्ये सुरनाथवन्ध्ये ।
व्यासादिवन्ध्ये सनकादिवन्ध्ये श्रीरङ्गवन्ध्ये रमतां मनो मे ।। ३ ।।

*ப்3ரஹ்மாதி3வந்த்4யே ஜக3தே3கவந்த்4யே*

*முகுந்த3வந்த்4யே ஸுரனாத2வந்த்4யே .*

*வ்யாஸாதி3வந்த்4யே ஸனகாதி3வந்த்4யே*

*ஸ்ரீரங்க3வந்த்4யே ரமதாம் மனோ மே .. ௩ ..*

ப்ரம்மன் முதலானவர்களால் வணங்கத்தக்கவனும், உலகங்களுக்கெல்லாம் வணங்கத்தக்கவனும், ராமன், கிருஷ்ணன் முதலான அவதாரங்களால் வணங்கத்தக்கவனும், அமரர் தலைவனாகிய இந்திரனால் வணங்கத் தக்கவனும், வ்யாஸர் முதலானோரால் வணங்கத்தக்கவனும், ஸனகர் முதலியவர்களால் வணங்கத்தக்கவனும், திருவரங்கநானிடத்தில் எனது மனம் லயிக்கட்டும்.

ब्रह्माधिराजे गरुडाधिराजे वैकुण्ठराजे सुरराजराजे
त्रैलोक्यराजे अखिललोकराजे श्रीरङ्गराजे रमतां मनो मे ।। ४ ।।

*ப்3ரஹ்மாதி4ராஜே க3ருடா3தி4ராஜே*

*வைகுண்ட2ராஜே ஸுரராஜராஜே*

*த்ரைலொக்யராஜே அகி2லலோகராஜே*

*ஸ்ரீரங்க3ராஜே ரமதாம் மனோ மே .. ௪ ..*

பிரமனுக்கும், கருடனுக்கும் ஸ்ரீ வைகுண்டத்திற்கும், இந்திரனுக்கும், மூவுலகங்கட்கும், ஸமஸ்தலோகங்களுக்கும் ராஜாவான (தலைவனான) ஸ்ரீரங்கராஜனிடத்தில் எனது மனம் லயிக்கட்டும்.

अमोघमुद्रे परिपूर्णमुद्रे श्रीयोगनिद्रे ससमुद्रनिद्रे ।
श्रितैकभद्रे जगदेकनिद्रे श्रीरङ्गभद्रे रमतां मनो मे ।। ५ ।।

*அமோக₄முத்₃ரே பரிபூர்ணமுத்₃ரே*
*ஶ்ரீயோக₃னித்₃ரே ஸஸமுத்₃ரனித்₃ரே .*
*ஶ்ரிதைகப₄த்₃ரே ஜக₃தே₃கனித்₃ரே*
*ஶ்ரீரங்க₃ப₄த்₃ரே ரமதாம் மனோ மே .. ரு ..*

(அடியார்களை உய்விக்க) பயனுள்ள உறக்கத்தையுடையவனும், பரிபூர்ணமான குறிப்பை உடையவனும், உறங்குவான் போல் யோகம் செய்பவனும், கடலின் நடுவில் சுகமாக நித்திரை கொள்ளுபவனும், அண்டினார்க்கு நன்மை பயப்பவனும், உலகுக்காகவே துயில் கொண்டிருப்பவனுமாகிய, திருவரங்கத்தில் சயனித்திருக்கும் மங்களகரனான திருவரங்கநானிடத்தில் என் மனது லயிக்கட்டும்.

सच्चित्तशायि बुजगेन्द्रशायि नन्दाङ्गशायि कमलङ्गशायि ।
क्षिराब्धिशायि वटपत्रशायि श्रीरङ्गशायि रमतां मनो मे ।। ६ ।।

*ஸச்சித்தஶாயி பு₃ஜகே₃ந்த்₃ரஶாயி*
*நந்த₃ாங்க₃ஶாயி கமலங்க₃ஶாயி .*
*க்ஷிராப்₃தி₄ஶாயி வடபத்ரஶாயி*
*ஶ்ரீரங்க₃ஶாயி ரமதாம் மனோ மே .. சு ..*

நல்லவர் உள்ளத்திலும், ஆதிசேஷன் மீதும், நந்தகோபர் மடியிலும், தாமரையாள் மடியிலும், பாற்கடலின் நடுவிலும், ஆலிலையிலும், திருவரங்கத்திலும் பள்ளி கொண்டிருக்கும் திருவரங்க நானிடத்தில் என் மனது லயிக்கட்டும்.

कम्सप्रमाथे नरकप्रमाथे भक्तप्रमाथे जगतम् निदाने ।

अनाथनाथे जगदेकनाथे श्रीरङ्गनाथे रमतां मनो मे ।। ७ ।।

*கம்ஸப்ரமாதே$_2$ நரகப்ரமாதே$_2$*

*ப$_4$க்தப்ரமாதே$_2$ ஜக$_3$தம் நித$_3$ானே .*

*அனாத$_2$னாதே$_2$ ஜக$_3$தே$_3$கனாதே$_2$*

*ஶ்ரீரங்க$_3$னாதே$_2$ ரமதாம் மனோ மே .. எ ..*

கம்ஸனைக் கொன்றவனும், நரகனை (நரகத்தை) அழித்தவனும், தன் திறத்து பக்தி செய்யாதவர்களை அழிப்பவனும், அனைத்துலகங்கட்கும் காரணமானவனும், புகலற்றவர்க்கு நாதனும், உலகங்களுக்கு ஒரே நாதனுமான திருவரங்கநாதனிடத்தில் எனது மனம் லயிக்கட்டும்.

कावेरिकूले करुणाविलोले मन्दारमूले धृतचारुचेले ।

दैत्यान्तकाले खिललोकलीले श्रीरङ्गलीले रमतां मनो मे ।। ८ ।।

*காவேரிகூலே கருணாவிலோலே*

*மந்த$_3$ாரமூலே த்$_4$ருதசாருசேலே .*

*தை$_3$த்யாந்தகாலே கி$_2$லலோகலீலே*

*ஶ்ரீரங்க$_3$லீலே ரமதாம் மனோ மே .. அ ..*

காவேரி நதிக்கரையில் எழுந்தருளியிருப்பனும், கருணைக் கொண்டவனும், மந்தார மரத்தின் அடியில் இருப்பவனும், அழகான பீதாம்பரம் அணிந்திருப்பவனும், அசுரர்களின் உயிரை முடிப்பவனும், அனைத்துலகங்களை லீலையாக கொண்டவனும், திருவரங்கத்தில் லீலை செய்பவனுமான திருவரங்கநானிடத்தில் என் மனது லயிக்கட்டும்.

इदं हि रङ्गं त्यजतामिहाङ्गं पुनर्न चाङ्गं यदि चाङ्गमेति ।
पाणौ रथाङ्गं चरणेम्बुगाङ्गं याने विहङ्गं शयने भुजङ्गम् ।। ९ ।।

*இத₃ம் ஹி ரங்க₃ம் த்யஜதாமிஹாங்க₃ம்*
*புனர்ன சாங்க₃ம் யதி₃ சாங்க₃மேதி .*
*பாணௌ ரத₂ாங்க₃ம் சரணேம்பு₃க₃ாங்க₃ம்*
*யானே விஹங்க₃ம் ஶயனே பு₄ஜங்க₃ம் .. ௯ ..*

இதுதான் திருவரங்கம். இங்கே உயிர் துறந்தவர்கட்கு மறுபடியும் உடல் இல்லை. உடல் கிடைத்தால் கையில் சக்கரமும், தாளில் கங்கை நீரும், கருடவாஹனமும், சேஷ சயனமும் ஆன ஸ்ரீரங்கநானின் (சாயுஜ்யத்தை அடைவான் அல்லது) தரிசனத்தைப் பெறுவான்.

रङ्गनाथा ्कं पुण्यं प्रतरुत्थाय यः पठेत् ।
सर्वान् कामानवाप्नोति रङ्गिसायुज्यमाप्नुयात् ।। १० ।।

*ரங்க₃நாத₂ாஷ்டகம் புண்யம் ப்ரதருத்த₂ாய ய: படே₂த் .*
*ஸர்வான் காமானவாப்னோதி ரங்கி₃ஸாயுஜ்யமாப்னுயாத் .. ௧௦*

மிக்க புனிதமான இந்த ரங்கநாதஷ்டகத்தை காலை எழுந்து எவன் படிப்பானோ, அவன் ஸகல விருப்பங்களையும் பெறுவான். திருவரங்க நாதனுடைய ஸாயுஜ்யத்தை அடைவான்.